# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.32/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா–01 (PW– 01 )** |
| **பெயர்** | :– | **முருகன்கார்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **பிரதாமன்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 16 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாவட்டம், தீவட்டிபட்டி, கணேஷ் நகரில் வசிக்கிறேன். நான் வழக்குரைஞராக தொழில் செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது.

2016-ஆம் ஆண்டு ஒருநாள் மாலை நீதிமன்ற பணி முடிந்து என் இருச் சக்கர வாகனத்தில் வீட்டிற்கு புறப்பட்டேன். குற்றவியல் வழக்குரைஞர் சங்கம் இருக்கும் இடத்தில் உள்ள வாயில் அருகில் சென்ற -போது டயர் வெடித்ததுபோன்று சத்தம் கேட்டது. நான் வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டேன். எனக்கு இடது கையில் அடிப்பட்டது. என்னை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சிகிச்சைக்காக சேர்த்தனர். மேல்சிகிச்சைக்காக சேலம் மணிபால் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். நான் மணிபால் மருத்துவமனையில் இருந்தபோது காவல் துறையினர் வந்து என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

நான் சொன்ன இடத்தில் சென்றபோது நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே குற்றவியல் வழக்குரைஞர்கள் சங்கத்திற்கு நேராக உள்ள வாயிலுக்கு அருகே வெடி சத்தம் கேட்டது என்றும் நான் கீழே விழுந்து -விட்டேன் என்றும் எழுந்து பார்த்தபோது இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டுவிட்டது என்றும் என்ன நடந்தது என்று பார்த்தபோது சுமார் 05 அல்லது 06 நபர்கள் கையில் சூரி கத்தி, பட்டா கத்தி ஆகியவற்றை வைத்துக் கொண்டு 03 ஆட்களை வெட்டுவதற்கு துரத்தினார்கள் என்றும் ஒரு நபரை மண்டையில் வெட்டினார்கள் என்றும் தாக்கப்பட்ட நபர்கள் சத்தம்

போட்டதும் அருகில் இருந்தவர்கள் அங்கு ஓடிவந்ததாகவும் அப்போது தாக்கியவர்களில் ஒருவர் இன்று தப்பித்துக்கொண்டாய்; என்றாவது ஒரு நாள் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டே தப்பித்து சென்றுவிட்டார் என்றும் அங்கிருந்த என்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள் என்றும் எனக்கு வைத்தியம் பார்த்த மருத்துவர் கையில் வெடிமருந்து இருப்பதாகவும் தசைக்குள் இரும்பு உருளைகளும் ஊசிகளும் இருப்பதாக சொன்னதாகவும் அவற்றை அகற்றி சிகிச்சை அளித்ததாகவும் மேல் சிகிச்சைக்காக நான் மணிபால் மருத்துவமனைக்கு சென்றதாகவும் அங்கு ஆய்வாளர் என்னை விசாரித்த -தாகவும் புலனாய்வின்போது சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காயத்தில் பீங்கான்கள்தான் இருந்தன.

**02–ஆம், 17–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**08–ஆம், 10–ஆம், 11–ஆம், 15–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**21–ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**03–ஆம், 06–ஆம், 07–ஆம், 09–ஆம், 12–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.